DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.37/2017

**prosecution witness: LW–10 as PW–9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : மகேஷ்வரி | தொழில்/ பதவி | : | ஆய்வாளர், அனைத்து மகளிர் கா.நிலையம் ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம். |
| க/பெ. | : முத்துக்குமார் | வயது | : | 50 |
| ஊர் | : ஆண்டிப்பட்டி | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>12.05.2026</u>

(எதிரி மதுரை சிறையில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:–**</u>

1. நான் தற்போது ஆய்வாளராக அனைத்து மகளிர் கா.நிலையம் ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.11.2009 ம் தேதி 17.00 மணிக்கு நான் தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது பாம்பன் சிவசக்தி நகர் சந்தியாகு மகன் அல்போன்ஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 109/2009 சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றைய தினம் 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கஸ்பார் பெர்ணாண்டோ, லிக்னேசியஸ் மரியோன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் சாட்சிகள் அல்போன்ஸ், சுதா, அயரின்மேரி, சுதியா, முத்துலெட்சமி, கஸ்பார் பெர்ணாண்டோ, லிக்னேசியஸ் மரியோன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.11.2009 ம் தேதி இந்த வழக்கின் 2வது எதிரி சந்திரன் என்ற தொட்டி சந்திரன் இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையத்தில் கைதாகி அவர் கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தின்பேரில் இந்த வழக்கில் 1ம் எதிரி ஓடப்பெட்டி கணேசன் என்பவரும் இணைந்து வாதியின் வீட்டில் உள்ள பொருட்களை திருடியதாக சொல்லியதின்பேரில் கோவில் காவல் நிலைய வழக்கின் ஆய்வாளர் திரு.நாகராஜன் அவர்கள் கைப்பற்றி வைத்திருந்த சொத்துக்களை பெற்று அத்தாட்சி மற்றும் படிவம் 91 மூலம் அனுப்பிவைத்தேன். 300 கிராம் வெள்ளி தட்டு, 200 கிராம் வெள்ளி செம்பு, 103.5 கிராம் வெள்ளி தட்டு ஒன்று, 81 கிராம் வெள்ளி கின்னம், 53.800 கிராம் வெள்ளி டம்ளர், 96.500 கிராம் வெள்ளி கின்னம், லேடீஸ் கோல்ட் வாட்ச் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி அத்தாட்சி மற்றும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளிப்பொருட்கள்தான் இவ்வழக்கில் ஒப்படைக்கப்பட்டதாகும். (**மேற்சொன்ன வழக்கு சொத்துக்கள் நான்கு எண்ணிக்கை அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி உண்மை நகல் அ.சா.ஆ–7 ஆகவும், படிவம் 91 உண்மை நகல் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை கூட்டிச் சென்றால் .... வெள்ளிக் கொழுசு, வெள்ளி பாத்திரங்கள் இவைகளை எடுத்து தங்களிடம் ஆஜர்படுத்துகிறேன்" என்பது அ.சா.ஆ.9 ஆக உண்மை நகலில் குறியிடப்படுகிறது.**)

4. பின்னர் சாட்சிகள் அல்போன்ஸ் என்பவரின் மறுவாக்குமூலத்தை பதிவு செய்தேன். பரமேஸ்வரன், ராமன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.11.2009ம் தேதி 16.50 மணிக்கு மதுரை மத்திய சிறைச்சாலை சென்று எதிரி சந்திரன் என்பவரை பார்மல் அரஸ்ட் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்து பி.டி. வாரண்ட் பெறப்பட்டு நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்துக்கொண்டு 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் 23.01.2010ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகாரில் ஆஜர் 1ம் எதிரியின் பெயரை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் அத்தாட்சியில் 1ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் தாய்வழக்கான சி.சி. 40/2010 வழக்கில் 2ம் எதிரியானவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோன்று எந்த விதத்தில் எந்த சம்பவமும்

நடைபெறவில்லை என்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் முறையாக விசாரணை செய்யாமல் 1ம் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.05.12 10:23:08 +0530